


# நன்கொடையும், தானமும் – பலரின் வாழ்வாதாரம்

## தி பிளேட்லெட் பேட்ரான் அறக்கட்டளை

சுபாஷிணி கோமேஸ்வரன்




இந்தியாவில் எங்கோ ஓர் மருத்துவமனையில், எந்த ஒரு தருணத்திலும், ஒரு குடும்பம் இரத்த தானம் செய்வோருக்காக காத்துக்கொண்டிருக்கிறது. இரத்தத பிளேட்லெட்டுகளுக்காகக் காத்திருக்கிறது. நம்பிக்கை அல்லது விரக்தியை ஏற்படுத்தக்கூடிய ஒரு தொலைபேசி அழைப்பிற்காகக் காத்திருக்கிறது. நம்மில் பலருக்கு, இது போல் தருணங்களை அறிய வாய்ப்பே இல்லை.

இரத்தத்திற்கான வேண்டுகோள்கள் நமது கைபேசிகளில் செய்திகளாக வரும்போது மட்டுமே நாம் அவற்றைக் கவனிக்கிறோம்; வேறு யாராவது பதிலளிப்பார்கள் என்ற நம்பிக்கையில் அவற்றை மற்றவர்களுக்கு அனுப்பிவிடுவது நமது இயல்பு. ஒவ்வொரு வேண்டுகோளுக்குப் பின்னால் நிகழும் பதற்றமான தேடலைப் பற்றி நாம் சிந்திப்பதே இல்லை. ஆனால், 'பிளேட்லெட் கிளப்' என்று பிரபலமாக அறியப்படும் 'பிளேட்லெட் பேட்ரான் அறக்கட்டளை' அமைப்பின் தன்னார்வலர்களுக்கு, இது போல் நெருக்கடியான அவசரநிலை அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாகவே இருக்கின்றன.

சென்னையில், வேமா ஸ்ரீவத்ஸ் இன்னும் சில கொடையாளர்கள் கொண்ட குழுவுடன் சேர்ந்து நிறுவப்பட்ட இந்த தன்னார்வ தொண்டு நிறுவனம், புற்றுநோய், இரத்தக் கோளாறுகள் மற்றும் வேறு பல உயிருக்கு ஆபத்தான நோய்களுடன் போராடும் நோயாளிகளுக்கு ஒரு முக்கிய ஆதரவு அமைப்பாக மாறியுள்ளது. 2018-ல் அதிகாரப்பூர்வமாகப் பதிவு செய்யப்பட்ட இந்த அறக்கட்டளை, தாமதிக்காமல் சரியான நேரத்தில் உதவி, கருணை, அர்ப்பணிப்பு என்ற கொள்கையைக் கொண்டு தொண்டு செய்யும் ஒரு இயக்கமாக வளர்ந்துள்ளது.

"ஒரு தேவையை உணர்ந்து, உடனடியாக என்ன செய்ய வேண்டும் என்று முயற்சிப்பதுதான் இதன் நோக்கம்," என்று வேமா அவருக்கே உரிதான தன்னடக்கத்துடன் கூறுகிறார். "உதவி செய்வதே எங்கள் நோக்கமாக இருந்தது. அவசர காலங்களில் இரத்தம் மற்றும் இரத்தப் பிளேட்லெட்கள் பெற குடும்பங்கள் சிரமப்படுவதை நாங்கள் கண்டோம்; அது கிடைக்கப் பெற ஒரு வழி இருக்க வேண்டும் என்று உணர்ந்தோம்." அந்த அவர்களின் சிந்தனையே, எளிய விருப்பமே சென்னையின் மிகவும் மதிக்கப்படும் தன்னார்வ நெட்வொர்க் ஒன்றின் அடித்தளமாக அமைந்தது.

ஆரம்ப நாட்கள் அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. "தகவல்களைப் பரிமாறிக்கொள்ள நாங்கள் பிளாக்பெர்ரி தொலைபேசிகளையே நம்பியிருக்க வேண்டியிருந்தது," என்று வேமா நினைவு கூர்கிறார். "இன்று, சமூக ஊடகங்கள் மக்களிடையேயான தொடர்பை பெருமளவு மாற்றியமைத்துள்ளன." மேம்பட்ட தொழில்நுட்பம் இருந்தபோதிலும், இரத்தப் பிளேட்லெட்கள் தானம் செய்ய மக்களை சம்மதிக்க வைப்பது ஒரு சவாலாகவே இருந்தது.

இரத்த தானத்தைப் போலல்லாமல், இரத்தப் பிளேட்லெட் தானம் ஒரு சிறப்பு செயல்முறை மூலம் மேற்கொள்ளப்படுகிறது. இதில், ஒரு இயந்திரம் தானம் செய்பவரின் இரத்தத்திலிருந்து இரத்தப் பிளேட்லெட்களைப் பிரித்து, மீதமுள்ள கூறுகளைப் பாதுகாப்பாக மீண்டும் உடலுக்குள் செலுத்துகிறது. இந்த செயல்முறை பொதுவாக 90 நிமிடங்கள் முதல் இரண்டு மணி நேரம் வரை ஆகும், ஆனால் ஒரே ஒரு தானம் செய்பவரிடமிருந்து சேகரிக்கப்படும் இரத்தப் பிளேட்லெட்கள், கீமோதெரபி, எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை, மற்றும் கடுமையான இரத்தக் கோளாறுகளுக்கான சிகிச்சைக்கு உட்படும் நோயாளிகளுக்கு உயிர்காக்கும் மருந்தாக அமையும்.

விழிப்புணர்வு தான் மிகவும் முக்கியம் என்பதை அந்தக் குழு உணர்ந்தது.

"பெரும் எண்ணிக்கையிலான மக்கள் உதவ விரும்புவது உண்மை" என்கிறார் வேமா. "அவர்களுக்குத் தேவையானது துல்லியமான தகவல்களும், உத்தரவாதம் மட்டுமே. புற்றுநோயாளிகளுக்கும், சிகிச்சை பெறும் குழந்தைகளுக்கும் இரத்தப் பிளேட்லெட்கள் எவ்வளவு முக்கியமானவை என்பதை அவர்கள் புரிந்துகொண்டவுடன், தானம் அளிக்க ஆர்வமாகிறார்கள்."

கொஞ்சம் கொஞ்சமாக, ஒரு கொடையாளர் அவருக்கு தெரிந்த இன்னும் ஒருவர் தானம் அளிக்க ஊக்கம் அளித்தார். தன்னார்வலர்கள் தங்கள் நண்பர்கள், உறவினர்கள் மற்றும் சக ஊழியர்களை அழைத்து வந்தனர். சுய நலமற்ற அர்ப்பணிப்புடன் ஈடுபடும் ஒரு சில நபர்களைக் கொண்டு தொடங்கிய இந்த நிறுவனம், சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் நேரும் அவசரநிலைகளுக்கு உதவக்கூடிய ஒரு விரிவான வலையமைப்பாக உருவெடுத்தது.

இன்று, இந்த அறக்கட்டளை, கீமோதெரபி சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கும், இரத்தக் கோளாறுகளுடன் போராடும் குழந்தைகளுக்கும் உயிர்காக்கும் ஸிங்கிள் டோனார் பிளேட்லெட் (SDP) தானங்களை ஒருங்கிணைத்து அவர்களுக்கு சேருமாறு செய்கிறது. எண்ணற்ற குடும்பங்களுக்கு, மிகுந்த நெருக்கடியான தருணங்களில், இரத்தப் பிளேட்லெட் கிளப்பிற்கு (Platelet Club) ஒரு அழைப்பு விடுத்தால் போதும்; வேண்டிய உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கை நிலவியுள்ளது.

"அச்சமும், சோர்வுமாக இருக்கும் மக்களிடமிருந்து எங்களுக்கு அடிக்கடி அழைப்புகள் வரும்," என்கிறார் வேமா. "அவர்கள் எங்களைத் தொடர்புகொள்வதற்கு முன், ஏற்கனவே பல மருத்துவமனைகளையும், இரத்த வங்கிகளையும் தொடர்பு கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு தைரியம் கொடுப்பது தான் நாங்கள் செய்யக்கூடிய குறைந்தபட்ச விஷயம்."

தானம் செய்பவர்களையும் நோயாளிகளையும் இணைப்பது இவர்களின் சிறப்பு அம்சம் எனினும், அதை மிக விரைவாகச் செயல்படுத்தும் தன்மை தான் இந்த அமைப்பைத் தனித்துவமாக்குகிறது. அவசரத் தேவைகள் அலுவலக நேரத்தைப் பார்த்து வருவதில்லை; நள்ளிரவு, பண்டிகை நாட்கள், வார இறுதி நாட்கள் மற்றும் பொது விடுமுறை நாட்களிலும் உதவிக் கோரிக்கைகள் வருகின்றன. ஆனாலும், தன்னார்வலர்கள் எப்போதும் தயாராகவே இருக்கிறார்கள்.

"ஒரு நாள் முழுதும் தங்களின் பணி செய்து முடித்த பின்பு, தாங்கள் இதுவரை சந்தித்திராத ஒருவருக்கு உதவி தேவைப்பட்டதற்காகவே, நகரத்தின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குத் தேடிச் சென்று ரத்தம் தானம் செய்தவர்கள் எங்கள் அமைப்பில் உள்ளனர்," என்று வேமா பெருமையுடன் கூறுகிறார். "அறிமுகம் இல்லாத ஒருவருக்கு உதவ வேண்டும் என்ற அந்த மனப்பான்மைதான் எனக்கு ஒவ்வொரு நாளும் உத்வேகம் அளிக்கிறது."

அத்தகைய உத்வேகம் அளிக்கும் தன்னார்வலர்களில் திரு.ரோஹித் மற்றும் திரு.நடராஜன் ஆகிய இருவரும் நூறு தடவைக்கு மேல் ரத்தம் தானம் செய்துள்ளனர். இவர்களைப் பொறுத்தவரை, ரத்தம் தானம் செய்வது என்பது எப்போதோ செய்யப்படும் ஒரு தர்ம காரியம் மட்டுமல்ல, அதுவே அவர்களின் வாழ்க்கை முறையாகவும் உள்ளது.
இதை ஒரு தியாகமாக அவர்கள் கருதுவதில்லை; மாறாக, மற்றொரு மனிதருக்கு உதவும் அளவுக்கு ஆரோக்கியமாக இருப்பதையே ஒரு பெரும்



பாக்கியமாகக் கருதுகிறார்கள். அங்கீகாரத்தை எதிர்பார்ப்பதை விடுத்து, மனிதகுலத்திற்கு இத்தகைய அர்த்தமுள்ள வகையில் சேவை செய்ய முடிவதைக் குறித்து அவர்கள் மிகுந்த பணிவுணர்வுடன் உணர்கிறார்கள்.

அவர்களின் அர்ப்பணிப்பு, அவர்கள் வழங்கும் நன்கொடைகளையும் விட மிக மிக அதிகம். விழிப்புணர்வு அடிமட்டத்தில் இருந்தே தொடங்க வேண்டும் என்று நம்பும் அவர்கள், நண்பர்கள், சக ஊழியர்கள் மற்றும் இளைஞர்களைத் தொடர்ந்து நன்கொடையாளர்களாக ஆகுமாறு தீவிரமாக ஊக்குவிக்கிறார்கள். இரத்தம் மற்றும் இரத்தப் பிளேட்லெட் தானம் குறித்து பரவி இருக்கும் தப்பான விஷயங்களை அகற்றி, ஒரு தன்னார்வ நன்கொடையாளர்கள் கொண்ட ஒரு புதிய தலைமுறையை உருவாக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். அவர்களின் கனவு எளிமையானது, ஆனாலும் ஆழமானது - தங்களின் அன்புக்குரியவர் சிகிச்சைக்காகக் காத்திருக்கும்போது, இரத்தம் அல்லது இரத்தத் பிளேட்லெட்களைத் தேடி எந்தவொரு குடும்பமும் அலைந்து திரிய வேண்டிய நிலை வரக்கூடாது என்பதே அது. இந்த அறக்கட்டளை அவர்களின் அர்ப்பணிப்பும், நம்பிக்கையும் கொண்டு வளர்ந்து இருக்கிறது என்பது பிரதிபலிக்கிறது.

கிடைக்க மிகவும் சிரமமான இரத்தக் குரூப்பைக் கையாளும்போது, இந்த அறக்கட்டளையின் முயற்சியும், உழைப்பும் மிகவும் தெளிவாகத் தெரிகிறது. உலகில் மிகவும் அரிதானவற்றில் ஒன்றான பம்பாய் இரத்தக் குழுவிற்குப் பொருத்தமான நன்கொடையாளரைக் கண்டுபிடிப்பது ஒரு மிகப்பெரிய சவாலாகும். "ஒரு அரிய இரத்தக் குரூப்பிற்கான கோரிக்கை வரும்போது, யோசிப்பதற்கு ஏதுமில்லை," என்கிறார் வேமா. "அனைவரும் உடனடியாக வேலை செய்யத் தொடங்குகிறார்கள். தன்னார்வலர்களும், நன்கொடையாளர்களும் தங்களுக்குத் தெரிந்தவர்களைத் தொடர்பு கொள்கிறார்கள், மருத்துவமனைகள் ஏற்பாடுகளை ஒருங்கிணைக்கின்றன. இது ஒரு கூட்டு முயற்சியாக மாறுகிறது."

இந்த அமைப்பு, நகரங்கள், மாநிலங்கள் மற்றும் சில சமயங்களில் சர்வதேச எல்லைகள் கடந்து, இரத்த தானம் செய்பவர்களையும் பெறுபவர்களையும் இணைக்க பெருமளவில் உதவியுள்ளது. இதன் மூலம் நோயாளிகள் மற்றும் மருத்துவ பணியாளர்கள் இருவரின் நம்பிக்கையையும் பெற்றுள்ளது.

ஆயினும், இந்த அறக்கட்டளையின் சிறப்பு அம்சங்களில் இரத்த தானம் என்பது ஒரு பகுதி மட்டுமே.

தன்னார்வலர்கள் நோயாளிகள் மற்றும் பராமரிப்பாளர்களுடன் நெருக்கமாகப் பணியாற்றியபோது, மற்றொரு நெஞ்சை உலுக்கும் உண்மையை அவர்கள் கவனித்தனர். சிகிச்சைக்காக சென்னைக்கு வரும் பல குடும்பங்கள் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய பின்னணியில் இருந்து வந்தவர்கள். மருத்துவச் செலவுகள் ஏற்கனவே அவர்களின் சேமிப்பைக் காலி செய்திருந்ததால், தங்குமிடம் அல்லது உணவுக்கு பணப் பற்றாக்குறை இருந்தது. பெற்றோர்கள் மருத்துவமனைத் தரையில் உறங்கினர், பராமரிப்பாளர்கள் உணவைத் தவிர்த்தனர், மேலும் குடும்பங்கள் தங்கள் அன்புக்குரியவர்களுடன் நெருக்கமாக இருப்பதற்கே போராடின.

இந்தக் கஷ்டங்களைக் கண்ட அறக்கட்டளைக்கு, ஒரு முக்கியமான கேள்வியை முன் நின்றது: மருத்துவ உதவி மட்டும் போதுமானதா? அவர்களின் பதில் 'நிச்சயமாக இல்லை' என்பதாக இருந்தது.

இந்த உணர்தல், அறக்கட்டளையின் மிகவும் நெகிழ்ச்சியான முயற்சிகளில் ஒன்றான 'மகிழ் இல்லம்' பிறக்கக் காரணமாக அமைந்தது. இந்த மையம், மருத்துவ சிகிச்சைக்காக சென்னைக்கு வரும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு இலவச தங்குமிடத்தையும் சத்தான உணவையும் வழங்குகிறது. "தங்கள் குழந்தைகளைக் காப்பாற்ற வந்திருந்தாலும், தாங்களே உணவுக்கும், வாழ்வதற்கும் போராடிக்கொண்டிருந்த பல குடும்பங்களை நாங்கள் சந்தித்தோம். குணமடைதலுக்கு வெறும் மருத்துவம் மட்டும் போதாது என்பதை அப்போது உணர்ந்தோம்; மக்களுக்கு கனிவான ஆதரவும் தேவைப்படுகின்றன," என்று வேமா கூறுகிறார்.

'மகிழ் இல்லம்' அதை மிகச் சரியாக வழங்குகிறது - குடும்பங்கள் தங்கள் வாழ்வின் மிகக் கடினமான காலகட்டங்களில் ஓய்வெடுக்கவும், உணவு அருந்தவும், ஆறுதல் பெறவும் ஏற்ற ஒரு பாதுகாப்பான, அன்பான சூழலை அது அளிக்கிறது. உடனடி மருத்துவத் தேவை வழங்குவதோடு நிறுத்தாமல், ஒரு மனிதரின் ஒட்டுமொத்த நல்வாழ்வையும் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்ற அறக்கட்டளையின் நம்பிக்கையை இது பிரதிபலிக்கிறது.

இந்தக் அவர்களின் கொள்கை, அமைப்பின் செயல்பாடுகளை சமூக நலனின் பிற பகுதிகளுக்கும் விரிவுபடுத்தியுள்ளது. தகுதியுள்ள மாணவர்கள் தங்கள் கனவுகளை நனவாக்கக் கல்வி உதவித்தொகைகள் உதவுகின்றன; மாற்றுத்திறனாளிகளுக்கு நடமாட்டத்திற்கான உதவிக் கருவிகள் வழங்கப்படுகின்றன; அதோடு முதியோர் இல்லங்களில் வசிப்பவர்களுக்குத் தேவையான ஆதரவும், பராமரிப்பும் அளிக்கப்படுகின்றன.

சில அமைப்புகளைப் பொறுத்தவரை, இத்தகைய செயல்பாட்டு விரிவாக்கம் அவற்றின் ஆரம்பகால லட்சியத்திலிருந்து விலகிச் செல்வது போலத் தோன்றலாம். ஆனால் வேமாவைப் பொறுத்தவரை, இது அவர்களின் கொள்கையின் மற்றொரு வெளிப்பாடே ஆகும். "ஒருவரின் தேவையைக் கண்டறியும்போது தான், ஒவ்வொரு சேவையும் விரிவடைகிறது" என்று அவர் கூறுகிறார். "அந்த தேவை ரத்தமாகவோ, கல்வியாகவோ, நடமாட்டத்திற்கான உதவியாகவோ அல்லது உணர்வுப்பூர்வமான ஆதரவாகவோ எதுவாக இருந்தாலும், அடிப்படைத் தத்துவம் ஒன்றுதான்: நம்மால் உதவ முடியுமென்றால், நாம் உதவ வேண்டும்."

அதன் செயல்பாடு மிக சிறப்பாக விரிவடைந்த போதிலும், இந்த அறக்கட்டளை தன்னார்வத் தொண்டில் உறுதியாக வேரூன்றியுள்ளது. மருத்துவர்கள், பொறியாளர்கள், மாணவர்கள், தொழில்முனைவோர், இல்லத்தரசிகள் மற்றும் ஓய்வுபெற்றவர்கள் என அனைவரும் தத்தமது திறன்களுக்கு ஏற்ப பங்களிக்கின்றனர். தாம் காட்டும் அன்பால் ஒருவரின் வாழ்க்கையை மாற்ற முடியும் என்ற பொதுவான நம்பிக்கையே அவர்களை ஒன்றிணைக்கிறது.

அறக்கட்டளையின் சாதனைகள் ஒரு முழு சமூகத்திற்கும் சொந்தமானவை என்பதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார். "ஆயிரக்கணக்கான மக்கள் அக்கறை காட்டுவதாலேயே இந்த அமைப்பு இயங்குகிறது" என்றும் அவர் கூறுகிறார்.

ஒருங்கிணந்த அந்த அன்பு உணர்வே, பிளேட்லெட் பேட்ரான் அறக்கட்டளையின் மிகப்பெரிய சாதனையாக இருக்கலாம். வேறுபாடுகளால் பிளவுகள் இருக்கும் இந்த உலகில், ஒரு பொதுவான நோக்கத்திற்காக சமூகங்கள் ஒன்றுபடும்போது எதுவும் சாத்தியம் என்பதை இது நமக்கு நினைவூட்டுகிறது. ஒவ்வொரு நன்கொடையும், முன்பின் தெரியாத ஒருவர் மற்றொரு முன்பின் தெரியாதவருக்கு உதவுவதைப் பிரதிபலிக்கிறது. மனிதகுலம் ஒன்றுசேர்ந்து நிற்கும் போதுதான் வலிமையாக இருக்கும் என்ற நம்பிக்கையை ஒவ்வொரு தன்னார்வலரும் தன்னகத்தே கொண்டுள்ளார்.

சென்னை, பிளேட்லெட் பேட்ரான் அறக்கட்டளையைக் கௌரவிக்கும் இவ்வேளையில், அது ஒரு அமைப்பை மட்டுமல்ல, ஒரு கருத்தையும் கௌரவிக்கிறது—அன்பை, கருணை, இரக்கம் கொண்டு சாதாரண மக்கள் செயல்படத் தீர்மானிக்கும்போது, அசாதாரணமான காரியங்களைச் சாதிக்க முடியும் என்பதே அந்தக் கருத்து.

நாடு முழுவதும் உள்ள மருத்துவமனை வார்டுகள், இரத்த வங்கிகள், தங்குமிடங்கள் மற்றும் வீடுகளில், அந்தக் கருத்தின் தாக்கம் ஒவ்வொரு நாளும் தொடர்ந்து உணரப்படுகிறது.

பிளேட்லெட் பேட்ரான் அறக்கட்டளை என்பது ஒரு உயிர்நாடி, ஒரு சமூகம், ஒரு இயக்கம்—மனிதநேயத்தை தங்கள் வாழ்வின் கொள்கையாக கொண்டு இருக்கும் சாதாரண மக்களால் கட்டமைக்கப்பட்டது.

அதுவே அதனை சென்னையின் சாம்பியனாக ஆக்குகிறது.